2022 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு 216 துணை மின் நிலையங்களை அமைப்பதற்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. அதில், 193 துணை மின் நிலையங்களுக்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, திட்ட மதிப்பீடுகள் இப்பொழுது இறுதி செய்யப்பட்டிருக்கின்றன. விரைவில், அதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படவிருக்கின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் பணிகள் நிறைவு பெற்றபின், அதற்கான பணிகள் தொடங்கப்படும். குறிப்பாக 8,905 புதிய மின் மாற்றிகள் அமைக்கப்பட்டதில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பட்டுக்கோட்டை தொகுதியில், 130 இடங்களில் புதிய மின் மாற்றிகள் அமைக்கப்பட்டு, அங்கு சீரான மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும் பணிகளை விரைவாக மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 126, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. ராஜா, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

126—

மண்பாண்ட கூட்டுறவுச் சங்கம்

***7353—திரு. ஈ. ராஜா:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *சங்கரன்கோவில் தொகுதியில் மண்பாண்ட கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள சங்கரன்கோவில் தொகுதியில் மண்பாண்டத் தொழிலாளர்களுக்குக் கூட்டுறவுச் சங்கம் அமைக்க, குறைந்தது 20 மண்பாண்டத் தொழிலாளர்கள் முன்வந்தால், கூட்டுறவுச் சங்கச் சட்டம் மற்றும் விதிகளுக்குட்பட்டு, அவருடைய கோரிக்கையை பரிசீலித்து, கூட்டுறவுச் சங்கம் அமைக்க விரைவில் அனுமதி அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. ராஜா அவர்கள்.

திரு. ஈ. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவில் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் சுமார் 200 குடும்பங்கள் மண்பாண்டம் செய்யும் தொழில் செய்து வாழ்ந்து வந்தார்கள். கடந்த 10 ஆண்டு கால ஆட்சியில் அவர்களுக்கு மண் எடுப்பதற்கு உரிய அனுமதி வழங்காத காரணத்தினாலும், அரசின் ஒத்துழைப்பு இல்லாத காரணத்தினாலும் அந்தத் தொழிலை தொடர முடியாமல் தற்போது தினக்கூலி வேலைக்குச் சென்று வருகிறார்கள். சங்கரன்கோவில் பகுதியில் மண்பாண்டத் தொழிற் கூட்டுறவுச் சங்கம் அமைக்க, மண்பாண்டத் தொழிலாளர்கள் தயாராக இருக்கிறார்கள். அனுமதி தருவதாகக் கூறிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சங்கரன்கோவில் நகரில் சுமார் 4,000 விசைத்தறிகளை நம்பி 20,000 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. நாளொன்றுக்கு சுமார் 70 இலட்சம் மதிப்பிலான துணிகளை உற்பத்தி செய்து வருகின்றனர். நமது மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதியார் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, ஒன்றிய அரசானது தமிழ்நாட்டில் இறக்குமதி பருத்தி மீதான 11 சதவிகித வரியை இரத்து செய்தது. அதற்காக தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனுடைய தாக்கம் இன்னும் ஓரிரு மாதங்களுக்குப் பின்புதான் கிடைக்கும் என்றபோதிலும், நூல் ஆலை உரிமையாளர்களும், பஞ்சு வணிகர்களும் செயற்கையான பஞ்சு தட்டுப்பாட்டை உருவாக்குவதன்மூலம் நூல் விலையினை உயர்த்திக் கொண்டு வருகின்றனர். இதனைக் கட்டுப்படுத்தும் விதமாக 'நூல் விலை கட்டுப்பாட்டுக் குழு' என்ற ஒரு குழுவினை, ஆலை உரிமையாளர்கள், உபயோகிப்பாளர்கள்,

2022 ஏப்ரல் 19]

அரசு அதிகாரிகளைக் கொண்ட முத்தரப்புக் குழுவை ஏற்படுத்த வேண்டும் என்பது சங்கரன்கோவில் நெசவாளர்களின் கோரிக்கையாக இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) ஏழை நெசவாளர்களின் வாழ்வில் விடியலை ஏற்படுத்த நம்முடைய மாண்புமிகு தளபதியார் அவர்களின் அரசானது நூல் விலை கட்டுப்பாட்டுக் குழுவை அமைக்க சங்கரன்கோவில் தொகுதி மக்களின் சார்பாக வேண்டி தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசி மாவட்டத்தில் செங்கோட்டை, கட்டளைகுடியிருப்பு, இலஞ்சி, ஆழ்வார்குறிச்சி, தேன்பொத்தை, கீழப்பாவூர், சுரண்டை ஆகிய 7 மண்பாண்ட கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. இவற்றில் கிட்டத்தட்ட 638 உறுப்பினர்கள் இருக்கிறார்கள்; நல்ல முறையில் அவை செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. நீங்கள் சொன்ன கோரிக்கைகள் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு ஆலோசித்து நிச்சயமாக நிறைவேற்றப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. ராஜா அவர்கள், கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. ஈ. ராஜா: *பரிசீலனை செய்வதாகக் கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய சங்கரன்கோவில் தொகுதியில் நிலங்கள் அதிகமாக இருக்கின்றன. அங்கு பருத்தி விளைவதற்கு அதிகமான வாய்ப்பு இருப்பதால் இந்திய பருத்திக் கழகம் அமைத்துத் தருவதாக கேள்வி நேரத்தில் முன்பு கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான ஏற்பாடுகளை இன்னும் துரிதப்படுத்த வேண்டும் என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்குத் தெரியும், மாண்புமிகு முதல்வர் அவர்கள்*

கிட்டத்தட்ட 4 முறை மத்திய அமைச்சர் அவர்களோடு பேசி, இன்றைக்கு cotton Import Duty-ஐ 11% குறைத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்படிச் செயல்படுகிறார் என்பது உங்களுக்குத் தெரியும். இது ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஒரே நாளில் முடியாது. நிச்சயமாக, படிப்படியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்வார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 127, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

127—

துணை சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

***4397—திரு. கி. அசோக்குமார்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி தொகுதி, கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், மல்லிநாயனப்பள்ளி கிராமத்தில் உள்ள துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கிருஷ்ணகிரி தொகுதிக்குட்பட்ட, கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மல்லிநாயனப்பள்ளி ஊராட்சி, 9,700 மக்கள்தொகை மட்டுமே கொண்ட ஓர் ஊராட்சியாகும். ஏற்கெனவே இங்கு ஒரு துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மேலும், கடந்த வாரம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய அறிவுறுத்தலின்படி, e–Sanjeevani என்கின்ற திட்டம், துணை சுகாதார நிலையங்களில் உள்ள செவிலியர்களின்மூலம் பயனாளிகள் ஆரம்ப சுகாதார நிலையத்தின் மருத்துவரைத் தொடர்புகொண்டு சிகிச்சை பெறும் வகையில் தொடங்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம் அனைத்து கிராமப்புற மக்களும், அவர்கள் சார்ந்த துணை சுகாதார நிலையங்களில் இருந்தே சிகிச்சைபெற்றும், மருந்துகளை பெற்றுக்கொண்டும்